05.03.2026

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

SC No.259/2025

அ.சா.1

<u>பெயர். திரு.தேவசேனா:</u>

சாட்சி மனுவில் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இந்த வழக்கு சம்பந்தமாக தனிப்பட்ட நபர் யாரும் எங்களிடம் புகார் அளிக்கவில்லை. சம்பவம் குறித்து யார் எங்களுக்கு தகவல் தெரிவித்தது என்றால், வாகன தணிக்கை செய்தபோது எங்களுக்கு தெரியவந்தது. சம்பவத்திற்கு முன்பு எத்தனை வாகனத்தை நாங்கள் தணிக்கை செய்தோம் என்றால், சுமார் 30 வாகனங்களை தணிக்கை செய்திருப்போம். அந்த வாகனத்தை பிடிப்பதற்கு முன்பு நாங்கள் அங்கு எவ்வளவு நேரம் இருந்திருப்போம் என்றால், அதிகபட்சம் சுமார் 45 நிமிடங்கள் இருந்திருப்போம். சம்பவ இடத்திற்கு காவல் நிலையத்திலிருந்து வந்தோம். நாங்கள் தனியாக வந்தோமா அல்லது மொத்தமாக வந்தோமா என்றால் மூன்று பேரும் ஒன்றாக வந்தோம். நாங்கள் இருவரும் எனது பைக்கிலும் உதவி ஆய்வாளர் அவரது ஸ்கூட்டரிலும் வந்தார்கள். மற்றொரு காவலர் என்னுடன் தான் வந்தார். எங்கள் மூவரை தவிர்த்து யாரும் வரவில்லை. எதிரியின் பெயரை யார் எங்களுக்கு சொன்னது என்றால் நாங்கள் வாகன தணிக்கை செய்யும் இயந்திரத்தை வைத்து பார்த்தபோது எதிரியின் பெயர் தெரியவந்தது. அதுமட்டுமல்லாது திருவெண்ணெய் நல்லூர் காவல் நிலையத்திலும் விசாரணை செய்தோம். அவர்களும் சொன்னார்கள். இந்த விவரத்தை நான் என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தபோது சொன்னேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும்

நேரம் பகல் நேரம் என்றால் சரிதான். ஜங்ஷன் பகுதி என்பதால் அந்த இடத்தில் இரு சக்கர வாகனம் நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரை எங்களது காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதை எப்படி உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் அவர் டேப்லட் கம்ப்யூட்டர் வைத்திருந்தார். அதில் தயார் செய்தார். எங்கு பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் அருகாமையில் இருந்த பெரியார் குடியிருப்பு பகுதியில் எடுத்தார்கள். எல்லாவற்றையும் தயார் செய்துவிட்டு பிரிண்ட் எடுத்து விட்டு வந்தோம். கைப்பற்ற பட்டதாக சொல்லப்படும் வாகனத்தை காவல் நிலையத்திற்கு யார் எடுத்து சென்றது என்றால், என்னுடன் வந்த மற்றொரு காவலர் இளவேந்தன் என்பவர் எடுத்துச் சென்றார். நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், நீதிமன்றத்தில் நாங்கள் ஒப்படைத்த எந்த சான்று பொருளும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், நாங்கள் புள்ளிவிவரத்திற்காக உதவி ஆய்வாளருக்கு அனுசரனையாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.